# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 30.05.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

கடந்த சில நாட்களுக்கு முன்பு மே 27 ஆம் தேதி நாம் அல்லாஹ்வின் அருளாலும் கருணையாலும் கிலாஃபத் தினம் கொண்டாடினோம். நான் எனது சொற்பொழிவில் கூறியதைப் போன்றே இந்த வருடத்தில் நடைபெறும் கிலாஃபத் தினத்திற்கு ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவம் இருந்தது. இந்த கிலாஃபத் தினம் பொதுவாக மனித வாழ்க்கையில் ஒரு முறைதான் வரும். அல்லது எவருக்காவது நீண்ட ஆயுள் இருந்தால் அவரது வாழ்க்கையில் ஒரு முறையே இந்த தினம் வருகிறது. அப்படிப்பட்டவர் கூட அவரது உறுப்புகளும் புலன்களும் நன்றாக இருந்தால்தான் இந்த தினத்தை முழுமையாகக் கொண்டாட முடியும். பல அஹ்மதிகளுக்கும் அல்லாஹ் இந்த கிலாஃபத் ஜுப்ளியைக் காட்டியுள்ளான். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 120 வருட கால கட்டத்தில் தொடர்ச்சியாக இரண்டு நூற்றாண்டு விழாக்களை நாம் கொண்டாடியுள்ளோம். இந்த வகையில் இறைவனுக்கு நன்றி கூறும் உணர்வுகளால் ஒவ்வொரு அஹ்மதியும் நிரம்பியுள்ளார். அஹ்மதிய்யா ஜமாஅத் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி இன்றிலிருந்து 19 ஆண்டுகளுக்கு முன்னர் நாம் நூற்றாண்டு விழா கொண்டாடினோம். இந்த வருடம் அஹ்மதிய்யா கிலாஃபத் நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி அதன் நூற்றாண்டு நிகழ்ச்சிகள் நடந்தன. இறைவனுக்கு நன்றியை வெளிப்படுத்தும் வகையில் மே மாதம் 27 ஆம் தேதி இந்த கிலாஃபத் ஜுப்ளியை நாம் கொண்டாடினோம். உலகின் பல்வேறு ஜமாஅத்துகள் இந்த விழாவை கொண்டாடி வருகிறது. இப்போது பல புதிய இளைஞர்கள் ஜமாஅத்தில் இருக்கின்றார்கள். அவர்களில் பலரும் 1989-ல் பிறந்தே இருக்கமாட்டார்கள். அவர்களில் யாருக்கும் அந்த ஜுப்ளியைப் பற்றி தெரிந்திருக்காது. அவர்களுக்கு இந்த கிலாஃபத் ஜுப்ளி ஒரு தனிப்பட்ட அனுபவத்தை தந்திருக்கும். உலகில் எங்கெல்லாம் ஜமாஅத்துகள் இருக்கின்றதோ அவர்கள் தமது ஜமாஅத் நிகழ்ச்சிகளை நடத்துவதுடன் M.T.A. மூலமாக தலைமையக நிகழ்ச்சிகளிலும் அவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். உள்ளூர் ஜமாஅத்துகளின் நிகழ்ச்சிகள் அந்தந்த ஜமாஅத்துகளின் நிலைமைக்கேற்ப முழு வருடமும் நடைபெறும். ஆனால், EXCEL Centre -ல் நடைபெற்ற தலைமையக மாநாட்டில் ஏறக்குறைய 19,000 பேர் கலந்து கொண்டார்கள். உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். M.T.A. மூலமாக ஜல்ஸாவை காண்கின்ற ரப்வா மற்றும் காதியானிலிலுள்ளவர்களது காட்சியும் உலகிற்கு காட்டப்பட்டது. அதுவும் மக்களது உள்ளங்களில் ஒரு குறிப்பான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இது தொடர்பாக ஜமாஅத் சகோதர, சகோதரிகளின் கருத்துக்கள் கடிதங்கள் மூலமாகவும், Fax கள் மூலமாகவும் வர ஆரம்பித்து விட்டது.

அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ்வின் அருளால் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உலகில் எந்த மூலையில் எங்கெல்லாம் இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளை மக்கள் கேட்டுக் கொண்டிருந்தார்களோ அவர்கள் அதனை ஜமாஅத் ஏற்பாட்டின்கீழ் கேட்டுக் கொண்டிருந்தாலும் அல்லது தனிப்பட்ட முறையில் தங்கள் வீடுகள் அல்லது குடும்பத்துடன் அமர்ந்து அதைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் பார்த்துக் கொண்ருந்தாலும் எல்லாருமே இந்த குறிப்பான சூழ்நிலையிலிருந்து பலன் பெற்றுக் கொண்டே இருந்திருக்கின்றார்கள். இறைவன் முழு உலகிலும் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பல்வேறு சமுதாயங்களிலுள்ள அஹ்மதிகளுக்கு ஒரே சரட்டில் கோர்க்கப்பட்ட ஒரு அனுபவத்தை ஒரு தனிப்பட்ட ஆன்மீக அனுபவத்தை இந்த மாநாட்டு நிகழ்ச்சிகள் வழங்கியுள்ளன. இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கும் அவர்களிடம்

இறைவன் செய்துள்ள வாக்குறுதி நிறைவேறி விட்டது என்பதற்கும் உள்ள ஒரு சான்றாகும். இந்த காட்சிகளை நம்மவர்களும் கண்டனர். மற்றவர்களும் கண்டனர்.

மே 27 ஆம் தேதி அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நூறு ஆண்டுகள் நிறைவடைந்தது நம்மவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அல்லாஹ்வின் உதவியின் அடையாளங்களை காட்டியிருக்கின்றது. அங்கு (இலண்டனில்) அமர்ந்தவாறு அஹ்மதி பெண்களும், ஆண்களும், குழந்தைகளும் ஆகிய இவர்களில் அதற்குப் பிறகு என்னை சந்தித்தவர்கள் எல்லாருமே எங்களுக்கு என்ன கிடைத்ததோ அது எங்களது ஈமானை புதுப்பித்து விட்டது என்று கூறினார்கள். ஒரு நபர் இவ்வாறு கடிதம் எழுதியுள்ளார்.

நான் புதிதாக இப்போது அஹ்மதியாகி இருப்பது போல் எனக்கு தோன்றுகிறது. பல சந்தேகங்களில் மூழ்கியிருந்த பலரும் இருந்தனர். அவர்கள் ஐந்தாவது கலீஃபாவிடம் பைஅத் செய்திருந்தாலும் அவர்களது உள்ளம் இவ்வி-யத்தில் திருப்தியடையாத நிலையில் இருந்தது. நாங்கள் இறைவன் முன்பு இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்பு) செய்தோம். இந்த நிகழ்ச்சிகளின் அருளால் அல்லாஹ் எங்கள் உள்ளங்களை தூய்மைப்படுத்தியுள்ளான். இன்னும் சொல்லப்போனால் எங்கள் உள்ளங்களை அல்லாஹ் கழுவி அவற்றை ஒளிமயமானதாக ஆக்கி விட்டான். இதற்குப் பிறகு நாங்கள் அஹ்மதிய்யா கிலாஃபத்திற்காக ஒவ்வொரு தியாகத்தையும் செய்ய உண்மையான உள்ளத்துடன் தயாராக இருப்போம். கிலாஃபத்தின் அருள்களை எப்போதும் பெறும் வகையில் நமது சந்ததிகளிடமும் அந்த ஆன்மாவை ஊதுவோம் என்று நாங்கள் உங்களிடம் உடன்படிக்கை செய்கின்றோம் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். இன்னொருவர் இவ்வாறு எழுதியுள்ளார்.

மரணித்தவர்களை உயிர்ப்பிக்கின்ற நிகழ்ச்சியாக ஒன்று இருக்க முடியும் என்றால் அது இந்த நிகழ்ச்சியும் உங்களது உரையுமேயாகும்.

இந்த நிகழ்ச்சி மூலமாக உண்மையிலேயே ஒரு புரட்சி அஹ்மதிய்யத்தின் உலகில் வர அல்லாஹ் உதவி செய்வானாக. அதனை அவன் நிலைபெறச் செய்வானாக. ஆமீன்.

நாம் அல்லாஹ்வின் நன்றியுள்ள அடியார்களாக ஆகி நமது உள்ளங்களில் ஏற்பட்டுள்ள தூய்மையான மாற்றத்தை எப்போதும் நிலைநிறுத்துபவர்களாகவும் நாம் இருக்க வேண்டும். EXCEL Centre -ன் அக்கம்பக்கத்திலுள்ள உள்ளூர் மக்களும் கூட மிகவும் வியப்புடன் மக்கள் கூட்டம் ஒன்றுகூடுவதையும் ஒரு வியக்கத்தகு நிலையில் அவர்கள் இருப்பதையும் கண்டு வியப்பில் ஆழ்ந்து விட்டார்கள். இவர்கள் யார்? என்று அவர்கள் கேட்க ஆரம்பித்தனர்.

பொதுவாக முஸ்லிம்களிடம் Discipline இல்லை என்று இவர்கள் கருதி வந்தனர். இப்படிப்பட்ட தாக்கத்தைத்தான் மேற்கத்திய உலகிற்கு இவர்கள் (முஸ்லிம்கள்) வழங்கியுள்ளார்கள். ஆனால், அந்த சமயத்தில் இவர்களது நிலை மிகவும் வியக்கத்தக்க வகையில் இருந்தது. இவர்கள் மிகவும் வியப்பிற்குரிய மக்களாக இருக்கின்றார்கள். இவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் இவர்களிடம் ஒரு அமைப்பு இருக்கின்றது. இவர்களில் பெரும்பாலார் ஆசியக் கண்டத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், இவர்களில் பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த மக்கள் உள்ளனர். ஒவ்வொரு ஆணும், பெண்ணும், இளைஞரும், குழந்தைகளும், பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த மக்களது பார்வையும் ஒரு பக்கமாகவே இருந்தது. கிலாஃபத் மீது இவர்களது உள்ளங்களில் உள்ள அன்பும் நேசமும் இவர்களது முகங்களில் வெளிப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் அவர்களது உடல் உறுப்புகளில்கூட இது வெளிப்பட்டுள்ளது என்றெல்லாம் அவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியவாறு கூறியுள்ளார்கள்.

EXCEL Centre –ல் பாதுகாப்பில் இருந்த ஒரு பெண் (பாதுகாவலர்) இது எனக்கு முற்றிலும் ஒரு புதிய காட்சியாகும். முற்றிலும் புதிய அனுபவமாகும். இந்தக் காட்சியைப் பார்த்த பிறகுதான் இஸ்லாம் என்ன? என்பது எங்களுக்கு தெரிய வந்தது. நான் இந்தக் காட்சியைக் கண்டதுமே முஸ்லிமாக விரும்புகின்றேன் என்று கூறியுள்ளார். இந்த மக்களிடம் இப்படிப்பட்ட தற்காலிக உணர்வுகள் எதிர் விளைவாக வெளிப்படுகின்றது. இந்த பெண் மற்றும் இவரைப் போன்ற பலரது உள்ளங்களிலும் இந்த காட்சிகள் தூய மாற்றத்தை ஏற்டுத்தக் காரணமாக அமைய நாம் துஆ செய்வோம்.

தன்னைப் படைத்தவனை உலகம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே நமது நோக்கமாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொடியின்கீழ் அவர்கள் ஒன்றிணைய வேண்டும். இந்த முரசு மூலமோ அல்லது வேறு எந்த வி–யத்தாலும் இதை அவர்கள் உணர வேண்டும்.

இந்த கிலாஃபத் ஜுப்ளி மாநாட்டில் நம்மவர்களும் மற்றவர்களும் ஒற்றுமையின் கீழ் புதிய மகிமைமிக்க தோற்றத்தைக் கண்டுள்ளார்கள். இது இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்திற்கு இருக்கின்ற சிறப்பு அம்சமாகும். இந்த ஒற்றுமையின் காரணமாக இன்று அல்லாஹ்வின் பாதுகாப்புக் கோட்டையில் இருக்கின்ற ஒரே ஜமாஅத் இந்த முஹம்மதிய மஸீஹின் ஜமாஅத் மட்டுமேயாகும். மற்றவர்கள் அனைவருமே பிரிவினைக்கு இரையாகி விட்டனர். இனியும் பிரிவினைக்கு இரையாகிக் கொண்டே இருப்பர். எதுவரை அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு மதிப்பளிப்பதில்லையோ, எதுவரை மஹ்தி மஸீஹ் தோன்றி விட்டால் அவருக்கு எனது ஸலாத்தை எட்ட வையுங்கள் என்ற கட்டளையை அவர்கள் ஏற்காமல் இருக்கின்றார்களோ அதுவரை அவர்கள் பிரிவினைக்கு இரையாகிக் கொண்டிருப்பர்.

இன்று முஹம்மதிய மஸீஹின் ஜமாஅத்துதான் அந்த உறுதி வாய்ந்த வளையத்தை (அதாவது கிலாஃபத்தை) வலுவாகப் பற்றிப் பிடித்துள்ளனர். அது உடையாது என்பதற்கு இறைவன் வாக்குறுதியளித்துள்ளான். இந்த உறுதிவாய்ந்த வளையத்தைப் பற்றிப் பிடித்தவர்களின் ஈமான் எப்போதும் பாதுகாப்பில் இருக்கும். இந்த வளையத்துடன் ஒன்றியிருக்கின்ற நம்பிக்கையாளர் அதற்காக தனது உயிரை அர்ப்பணித்து விடுவார். ஆனால், அந்த வளையத்தை ஒருபோதும் கைவிட மாட்டார். ஏனென்றால், அதனால் அவரது ஈமானிற்கு அபாயம் இருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு இத்தகு சம்பவங்களால் நிறைந்து காணப்படுகிறது. தாயின் கண் முன்னால் மகன் கொலை செய்யப்பட்டார். பிறகு தந்தைக்கும் பல்வேறு கொடுமைகளை இழைத்து கொஞ்சம் கொஞ்சமாக கொலை செய்தனர். அவர்களை –ஹீதாக்கினார்கள். தந்தைக்கு முன்னால் மகன் –ஹீதாக்கப்பட்ட பல சம்பவங்கள் நடந்தன. அஹ்மதிய்யத்தை கைவிடாமலிருந்த காரணத்தால் அளவுக்கு அதிகமாக கொடுமைகள் பல அஹ்மதிகளுக்கும் இழைக்கப்பட்டன. கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை சித்ரவதை செய்து அவர்களை எதிரிகள் கொன்றனர். இது பல ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவங்கள் மட்டுமல்ல. மாறாக, இந்த ஆண்டும் இப்படிப்பட்ட பல சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால், எத்தகு ஈமானில் அவர்கள் நிலைபெற்று இருந்தனர் என்றால், இத்தகைய கொடுமைகள் அவர்களது உறுதிவாய்ந்த பாதங்களில் தடுமாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை.

இன்று நாம் கொண்டாடும் கிலாஃபத் ஜுப்ளியின் மகிழ்ச்சியானது உண்மையில் கிலாஃபத்தின் நூறு ஆண்டுகளில் ஜமாஅத் மீது அல்லாஹ் பொழிந்துள்ள இறையருள்களின் மழையினால் ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியேயாகும். கிலாஃபத்தின் அருட்கொடையுடன் ஒன்றியிருந்ததன் காரணாக அல்லாஹ் வழங்கியுள்ள இந்த செழிப்பான தோட்டத்தால் நமக்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியை நாம் கொண்டாடுகின்றோம். இந்த செழிப்பான தோட்டத்தைக் கண்டு நாம் மகிழும்போதும், இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும்போதும் அந்த

அஹ்மதி -ஹீதுகளையும் நீங்கள் நினைவில் வைக்க வேண்டும். தங்களது இரத்தத்தால் இந்த தோட்டத்தை செழிப்படையச் செய்த இந்த -ஹீதுகளுக்காகவும் இவர்களது சந்ததிகளுக்காவும் நீங்கள் துஆ செய்யுங்கள்.

**உருவா** என்ற அரபிச் சொல்லுக்கு (வளையம் என்ற பொருள் மட்டுமின்றி) எப்போதும் பசுமையாக இருக்கின்ற காய்கனிகள் என்ற பொருளும் இருக்கின்றது. மழை குறைவாக இருப்பதன் காரணமாக இவற்றின் வயல்களில் வறட்சி ஒருபோதும் ஏற்படாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதுள்ள ஈமானின் காரணமாக இந்த பசுமைமிக்க காய்கனிகள் உள்ள தோட்டத்தின் வடிவில் இந்த ஜமாஅத்தை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியுள்ளான். அதனை எப்போதும் செழிப்பாகவும் பசுமையாகவும் அவன் வைத்திருக்கின்றான். பனித்துளிகளின் ஈரம் இவற்றை எப்போதும் செழிப்பான வயல்கள் மற்றும் பசுமையான தோட்டங்களின் வடிவில் நிலைநாட்டியுள்ளது. இந்த உறுதிமிக்க வளையத்தை பற்றிப் பிடித்திருந்தால் நீங்கள் அருட்கொடைகளுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வீர்கள்.

**அல்லாஹ் இது தொடர்பாக இவ்வாறு கூறுகின்றான்:**

-ய்த்தான் கூறுபவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கைக் கொள்கிறவர் ஒருபோதும் உடைந்துவிடாத மிகவும் உறுதியுள்ள நம்பத்தகுந்த ஒன்றை வலுவாகப் பற்றிக் கொண்டார். அல்லாஹ் நன்கு செவியேற்பவனும் நன்கு அறிபவனுமாவான். (2:257)

எவர்கள் உளத்தூய்மையுடன் அல்லாஹ்வின் இந்த அருட்கொடையுடன் ஒன்றியிருப்பார்களே, அதற்காக அல்லாஹ்விடம் துஆக்களைக் கேட்டுக் கொண்டிருப்பார்களோ அப்படிப்பட்டவர்கள் அல்லாஹ் அதிகமாக துஆக்களை கேட்பவன் என்பதை நினைவில் வைக்க வேண்டும். அவன் நமது உள்ளங்களின் நிலைமையை அறிந்துள்ளான். நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட துஆக்களையும் முயற்சிகளையும் அவன் வீணாக்க மாட்டான். நமது உள்ளமும் ஈமானால் நிரம்பி இருக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முன்னர் தோன்றிய நபிமார்களின் அற்புதங்கள் அவர்கள் மரணித்த சமயத்தில் அவர்களுடன் சேர்ந்து மரணித்து விட்டன. ஆனால், நமது நபி (ஸல்) அவர்களின் அற்புதங்கள் இன்றுவரை வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. கியாமத் நாள் வரை அவை வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். எனக்கு ஆதரவாக எவையெல்லாம் வெளிப்படுகின்றதோ உண்மையில் அவை எல்லாமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களேயாகும்.

அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் தன்னுடனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனும் உண்மையில் ஒன்றியிருக்கச் செய்வானாக. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பராக விளங்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் ஒரு உயிரோட்டமுள்ள தொடர்பை உருவாக்குபவர்களாக அவர்களை ஆக்குவானாக. அஹ்மதிய்யா கிலாஃபத்தை நிலைநாட்டுவதற்கு ஒவ்வொரு தியாகத்தையும் செய்ய தயாராக இருக்கின்றோம் என்று அவர்கள் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுபவர்களாக அல்லாஹ் அவர்களை ஆக்குவானாக. இன்று நாம் கண்ட ஒற்றுமையின் காட்சிகள், கிலாஃபத் மீது வெளிப்படுத்திய அன்பின் காட்சிகள் மற்றவர்களிடம் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாகவும் ஒரு அற்புதமாகவும் இருந்தது. அதை தொடர்ந்து நிலைநாட்ட அல்லாஹ்வின் முன்பு குனிபவர்களாக நாம் ஆக வேண்டும். அதனால் நமது இந்த நன்றியுணர்வின் காரணமாக அல்லாஹ் இந்த அருட்கொடையை நமக்காகவும் நமது சந்ததிகளுக்காகவும் நிரந்தரமானதாக

ஆக்குவானாக. ஏனென்றால், நீங்கள் எனது அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தினால் நான் எனது அருட்கொடைகளை மேலும் அதிகரிக்கச் செய்வேன் என்று அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு வாக்களித்துள்ளான். அதன் மூலம் உங்களது ஈமானுக்கு நான் மேலும் முன்னேற்றத்தை வழங்குவேன். அதன் விளைவாக நீங்கள் எனது அருள்களுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வீர்கள். இது தொடர்பாக அல்லாஹ் **வஇத் தஃஸன ரப்புகும் லஇன் ஸகர்தும் ல அஸீதன்னக்கும்** – மேலும் உமது இறைவன் நீங்கள் நன்றி செலுத்தினால் நான் உங்களுக்கு இன்னும் அதிகமாக வழங்குவேன் என்று அறிவிப்பு செய்துள்ளான். இன்றைய நாட்களில் நான் எனக்கு வரும் கடிதங்களைப் பார்க்கும்போது உள்ளத்தில் வியத்தகு நிலையை நான் உணர்கின்றேன். நான் எவ்வாறு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவேன் என நான் சிந்திக்கின்றேன். அவனது அருள்களின் மழை எவ்வாறு ஜமாஅத் மீது பொழிகின்றதென்றால் அதற்கு எதிரில் உடலிலுள்ள அணுக்கள் எல்லாம் அவனுக்கு நன்றி செலுத்தினாலும், அது முழுமையடைந்து விட முடியாது.

எந்த அளவு நன்றி செலுத்தும் வகையில் கடிதங்கள் வந்துள்ளன என்றால், இன்று உலகில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஜமாஅத்தில் உள்ளவர்கள் மட்டுமே தமது நன்றியுணர்வில் இந்த அளவு முன்னேறியிருக்கின்றார்கள் என்பதை உறுதியாக என்னால் கூற முடியும். எதுவரை இப்படிப்பட்ட நன்றி செலுத்தும் உணர்வுகள் அதிகரித்துக் கொண்டே இருக்குமோ அதுவரை அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நாம் வாரிசாக ஆகிக் கொண்டேயிருப்போம். நமது சந்ததிகளும் அந்த அருட்கொகைளுக்கு வாரிசாகிக் கொண்டேயிருப்பார்கள்.

இந்த நன்றி செலுத்தும் உணர்வுகளை ஒருபோதும் தனிந்து விடும்படி செய்து விடாதீர்கள். இந்த நன்றியுணர்வே நமக்காக புதுப்புது செழிப்பான தோட்டங்களை உருவாக்கிக் கொண்டே செல்லும். அவை நமது ஈமானின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமையும்.

இன்று உலகம் கேளிக்கைகளிலும் விளையாட்டுகளிலும் மூழ்கியிருக்கின்றது. அவர்களுக்கு வழிகாட்ட யாரும் இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத் மட்டும்தான் கிலாஃபத்தின் கொடியின் கீழ் தாங்கள் செல்லும் திசைகள் சரியானதுதானா? என்பதை கண்டுணர்ந்து செயல்பட்டு வருகிறது. நிச்சயமாக இது எப்படிப்பட்ட அருட்கொடை என்றால் இதற்காக நன்றி செலுத்தும் உரிமையை நாம் நிறைவேற்றிவிட முடியாது. நாவளவில் மட்டுமல்லாமல் உங்களது செயல்களை சீர்திருத்தும் வடிவில் நீங்கள் நன்றி செலுத்தி வந்தால் நான் உங்களுக்கு மேலும் எனது அருட்கொகைளை வழங்கி வருவேன் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

எனவே, இதற்காக துஆவும் செய்து வாருங்கள். நீங்கள் எனக்காக துஆ செய்யுங்கள். நான் உங்களுக்காக துஆ செய்கின்றேன். அதன் மூலம் இந்த நன்றி செலுத்தும் உணர்வுகளும் அல்லாஹ்வின் அருட்கொடைகளும் எப்போதும் முடிந்து போகாமல் இருக்கட்டும். ஒவ்வொரு நொடியும் அது வளர்ந்து கொண்டே செல்லட்டும். எண்ணற்ற கடிதங்களும், Fax –களும் ஜமாஅத் சகோதரர்களிடமிருந்தும் சகோதரிகளிடமிருந்தும் வந்த வண்ணம் இருக்கின்றது. நன்றியுணர்வில் நிரம்பியுள்ள இந்த கடிதங்களுக்கு நானே பதில் அனுப்ப முயற்சி செய்கின்றேன். விரைவாக பதில் அனுப்ப முயற்சி செய்கின்றேன். ஆனால் சில சுற்றுப்பயணங்களுக்கான தயாரிப்பில் ஈடுபடுவதன் காரணமாக தொடர்ந்து பணிகள் இருந்து வருவதன் காரணமாக நான் பதில் அனுப்ப தாமதமாகலாம். அல்லாஹ் உங்களது ஈமானையும் மனத்தூய்மையையும் வளர்ச்சியடையச் செய்வானாக என்று நான் துஆ செய்கின்றேன்.

சில கடிதங்களைப் பார்க்கும் போது எனது உணர்வுகளை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. எப்படிப்பட்ட அழகான பூக்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தோட்டத்தில் அல்லாஹ்

மலரச் செய்துள்ளான்? அவற்றின் அழகை விவரிப்பதுகூட சில நேரங்களில் முடியாத காரியாக ஆகி விடுகின்றது.

அல்லாஹ்வின் அருட்கொடைகளில் ஒன்று இக்காலத்தின் கண்டுபிடிப்பாக இருக்கின்ற Satellite TV (செயற்கைக்கோள் தொலைக்காட்சி) ஆகும். இதனை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளான். இதில் நமது பல Volunteers (தன்னார்வத் தொண்டர்கள்) மிகுந்த உழைப்புடன் பணிபுரிந்து வருகின்றார்கள். சம்பளம் வாங்கி பணி செய்பவர்கள் மிகவும் குறைவானவர்கள் தான். பெரும்பாலார் தமது நேரத்தை இதற்காக செலவு செய்கின்றார்கள் எவ்வித கூலியுமின்றி அவர்கள் வேலை செய்கின்றார்கள். இதன் காரணமாகவே இந்த எல்லா நிகழ்ச்சிகளையும் உலகத்தால் பார்க்க முடிகின்றது. இதனை வெற்றிகரமாக செயல்படுத்தவும் முடிகின்றது. அல்லாஹ்வின் அருள்களின் காட்சிகளை இதன் மூலமாக உலகுக்கு காட்ட முடிகின்றது.

அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் தூதுச் செய்தியை உலகிற்கு எட்ட வைத்து அதன் மூலம் நற்பாக்கியமுள்ள ஆன்மாக்களுக்கு உண்மையை அடையாளங் காணும்படி செய்ய முடிகின்றது. அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாம்கள் மூலம் ஜமாஅத்தின் முன்னேற்றத்தைப் பற்றிய செய்தியை அறிவித்த போதும் அதன் உறுதியால் அவர்களது உள்ளத்தை நிரப்பிய போதும் அதுபற்றி வந்த இறையறிவிப்புகளில் ஒன்று கதபல்லாஹு ல அக்லிபன்ன அன வ ருஸுலி என்பதாகும். இந்த இல்ஹாமை மொழிபெயர்த்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

துவக்க நாட்களிலிருந்தே அல்லாஹ்வும் அவனது தூதர்களும் வெற்றி பெறுவார்கள் என்பதை அல்லாஹ் விதித்துள்ளான்.

இந்த காலத்தில் இஸ்லாத்தின் முன்னேற்றம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றது. அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப இது நடக்கும்.

எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வெற்றியை வழங்குவதும் அல்லாஹ்வின் விதிகளில் ஒரு விதியாக இருக்கின்றது. ஆனால், அதற்கு உலகப் பொருள்களும் தேவை. அந்தப் பொருள்களை அதற்குரிய நேரத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான். இப்போதும் வழங்கி வருகின்றான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது காலத்தில் எழுதிய புத்தகங்களே ஒரு பொக்கி-மாக உலகத்திற்கு முன்னால் இருந்தன. இப்போது இந்த காலத்தில் இந்த பொக்கி-த்தை MTA மூலமாக உலகிற்கு அளிப்பதற்குரிய வழிகளை அல்லாஹ் நமக்கு தந்துள்ளான். இந்த காலத்து கண்டுபிடிப்புகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகத்தான் சரியாக பயன்படுத்த முடியும் என்பதை MTA அறிவித்துக் கொண்டிருக்கின்றது. இப்போது MTA -வில் உள்ள மூன்று சேனல்கள் நம்மவர்களுக்கு மட்டும் தர்பிய்யத் வழங்கும் பணியைச் செய்யவில்லை. மாறாக, இஸ்லாத்தின் எதிரிகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்குத் தந்த ஆதாரங்கள் மூலம் வாயடைக்கச் செய்யும் பணியையும் அது செய்து வருகின்றது.

MTA வை எங்கு அல்லாஹ் வெற்றியை பிறருக்குக் காட்டுவதற்கான வழியாக ஆக்கியுள்ளானோ அங்கு அதே வெற்றியை நமக்கு வழங்குவதற்கான ஒரு ஆயுதமாகவும் ஆக்கியுள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கங்களை எடுத்துக்கொண்டு அதை நிறைவு செய்யும் முகமாக MTA ஒவ்வொரு வீட்டிலும் நுழைந்து வருகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின்

எஜமானரான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் செய்த பணிகள் இந்த காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் ஒப்படைத்திருந்த அந்த பணிகளை தொடர்ந்து செய்து கொண்டே செல்வது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பணியாக இருந்தது. அவற்றில் **அற்புதங்களை காட்டுவது, உள்ளங்களை தூய்மைப்படுத்துவது, திருக்குர்ஆனின் போதனைகளைப் பரப்புவது, மனித இனத்திடம் இறைஞானத்தின் முத்துக்களை வழங்குதல்** ஆகியவை அடங்கும்.

இன்று இக்கால கண்டுபிடிப்புகளை பயன்படுத்தியவாறு இந்த எல்லா பணிகளையும செய்வது MTA மட்டுமேயாகும். இஸ்லாமிய நாடுகளின் சேனல்கள், சில இஸ்லாமிய அமைப்புகளின் சேனல்கள் இருந்தும்கூட அவற்றை நீங்கள் கவனமாகப் பார்த்தால் நான் குறிப்பிட்ட இந்த நான்கு வி-யங்கள் அதில் உங்களுக்கு தெரியாது. ஓரிடத்தில் இவர்கள் சரியான வி-யத்தை கூறினால் பிரிதோரிடத்தில் எப்படிப்பட்ட கேலிக்குரிய வி-யத்தை கூறிவிடுகின்றனர் என்றால், அதன் மூலம் எந்தவொரு அறிவாளியும் இஸ்லாத்தின் சரியான தோற்றத்தைக் காண முடியாமல் ஆகி விடுகின்றது. பிறகு உலகிலுள்ள ஏனைய டிவி சேனல்களை விளம்பரம் இல்லாமல் நடத்தவே முடியாது. அதில் கேளிக்கைகளும், வீணான வி-யங்களும் உள்ளன.

எனவே, இன்று மனிதனின் படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றும் ஒரே சேனல் முஹம்மதிய மஸீஹின் சேனல் ஆகும்.

எனவே, அஹ்மதிகள் MTA வை குறிப்பாக பார்க்க வேண்டும். குறிப்பாக குத்பாக்கள் மற்றும் ஏனைய தர்பிய்யத் நிகழ்ச்சிகளை கேட்க வேண்டும். பார்க்க வேண்டும்.

கிலாஃபத் இல்லையென்றால் நீங்கள் எந்த அளவு முயற்சி செய்தாலும் எந்தவொரு அஞ்சுமனாலும் அல்லது எந்தவொரு துறையாலும் இந்த சேனலை இவ்வாறு நடத்தியிருக்க முடியாது. எனவே, MTA வும் கிலாஃபத்தின் அருள்களின் ஒரு அருளாகும். எனவே, இதிலிருந்து முழுமையான பயனடைய வேண்டும்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற எந்தவொரு அமைப்பை ஏற்படுத்தினலும் அதனை அவன் கிலாஃபத்தின் அமைப்புடன் இணைத்துள்ளான். எனவே, எப்போதும் இதற்கு மதிப்பளியுங்கள். இந்த கிலாஃபத் ஜூப்ளி நிகழ்ச்சிகள் மூலமாக ஒவ்வொரு அஹ்மதியிடமும் ஏற்பட்டுள்ள மாற்றம் தற்காலிகமான மாற்றமாகவும், அந்த உணர்வுகள் தற்காலிக உணர்வுகளாகவும் இருக்கக் கூடாது. மாறாக, இவற்றை நினைவில் வைத்து எப்போதும் அதை புதுப்பித்துக் கொண்டிருக்க வேண்டும். இதனை நிரந்தரமாக உங்களது வாழ்க்கையின் ஒரு அங்கமாக ஆக்கிவிட வேண்டும். நான் ஒரு உறுதிமொழியை எடுத்தேன். அதற்கும் சிறந்த நல்விளைவு ஏற்பட்டுள்ளது. ஒவ்வொருவர் மீதும் அதன் தாக்கம் வெளிப்பட்டுள்ளது. இந்த உறுதிமொழியை எப்போதும் நினைவில் வைக்க முயற்சி செய்து கொண்டிருங்கள். நீங்கள் உடன்படிக்கை செய்தால் அதை நிறைவேற்ற வேண்டும் என அல்லாஹ் கூறியுள்ளான். நீங்கள் செய்த உடன்படிக்கை தொடர்பாக உங்களிடம் கேட்கப்படும் என அல்லாஹ் கூறியுள்ளான்.

இன்று உங்களது மூளையில் இந்த வி-யம் புதிதாக இருக்கும் போதே நான் இதனை மீண்டும் கூறக்காரணம் இந்த உறுதிமொழி எப்பொழுதுமே புதிதாக உங்கள் நினைவில் இருக்க வேண்டும். மேலும் இந்த உறுதிமொழி உங்களுக்கு மேலும் வலிமையை வழங்க வேண்டும்.

எந்த ஒரு வி-யத்தையும் எந்த ஒரு உறுதிமொழியையும் அல்லாஹ்வின் அருள் இல்லாமல் நிறைவேற்ற முடியாது என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். நாங்கள் உறுதிமொழி எடுத்துள்ளோம். அதற்கேற்ப நாங்கள் செயல்படுவோம் இன்-ா அல்லாஹ் என கடிதங்களில் மக்கள் எழுதுகின்றனர். ஆனால், நமது உறுதிமொழியை செயல்படுத்த நாம் உறுதியாக நிலைநிற்பதற்கு அல்லாஹ் தவ்ஃபீகை வழங்க துஆ செய்யுங்கள். ஏனென்றால், இது அவனது அருள் இல்லாமல் சாத்தியமற்ற ஒன்றாகும். இதற்காக அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைக்கு ஏற்ப செயல்படுவது அவசியமாகும். உங்களது இறைவணக்கத்தின் தரத்தை முன்பை விட உயர்த்துங்கள். நன்மைகளில் முன்பை விட வளர்ச்சியைப் பெற வேண்டும். பொருத்தமான நற்செயல்களைச் செய்ய தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருங்கள். நன்மைகளை செய்வதில் ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்படுதலும் ஒரு முக்கிய வி-யமாகும். கிலாஃபத்திற்கு கட்டுப்படுதலிலும் ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்படுதலும் ஒரு முக்கிய வி-யமாகும். அது இல்லாமல் நன்மைகளும் இல்லை. உறுதிமொழியை நிறைவேற்றுதலும் இல்லை. ஜமாஅத் அமைப்பும் கிலாஃபத்தை பாதுகாக்கின்றது. எனவே, அதற்கு கட்டுப்படுவது அவசியமாகும். அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் தனது உறுதிமொழியில் நிலைநிற்பதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக. மேலும் அது நம்மை அல்லாஹ்வுக்கு அருகில் கொண்டு செல்வதாக அமையட்டும். மே 27 ஆம் தேதி அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள இன்னொரு நற்செய்தி என்னவென்றால் இத்தாலியில் மிக நீண்ட காலமாக மி-ன் ஹவுஸ் மற்றும் பள்ளிவாசல் கட்ட நிலம் வாங்குவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வந்தன. ஆனால், மே 27 ஆம் தேதி அன்றே COUNCIL நம்மை அழைத்து ஒரு நிலத்தை இதற்காக நமக்கு விற்றுள்ளது. எந்த நாட்டில் கிறிஸ்தவத்தின் கிலாஃபத் இதுவரை நிலைபெற்றுள்ளதோ அந்த நாட்டில் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி அல்லாஹ் எப்படிப்பட்ட இடத்தை நமக்கு வழங்கியுள்ளான் என்றால் அங்கு முஹம்மதிய மஸீஹின் அடிமைகளின் ஒரு தலைமையகம் நிலைநாட்டப்படும். ஒரு பள்ளிவாசலும் கட்டப்படும் இன்-ா அல்லாஹ். அங்கிருந்து அல்லாஹ்வின் தவ்ஹீதின் அறிவிப்பு செய்யப்படும். இன்-ா அல்லாஹ்.

மவ்லவிகள் கூச்சலிட்ட பிறகும் கூட பாகிஸ்தானில் நமது ஜுப்ளி நிகழ்ச்சிகளில் ஜமாஅத் சகோதரர்கள் கலந்து கொண்டனர். MTA மூலம் அவர்கள் நம்முடன் கலந்து கொண்டனர். 1989-ல் ஜமாஅத்தின் நூற்றாண்டு நிறைவடைவதையொட்டி நடந்த நிகழ்ச்சிகளில் பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகளால் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால் கிலாஃபத் ஜுப்ளி நிகழ்ச்சிகளில் அவர்கள் கலந்து கொண்டனர். அதற்கு (மே 27 ஆம் தேதி) அடுத்த சில நாட்களில் இதற்கு தடை விதிக்கப்பட்டது. 1989-ல் ஜமாஅத்தின் நூற்றாண்டு நிகழ்ச்சிகளுக்காக எல்லாவிதமான தயாரிப்பும் பாகிஸ்தானி அஹ்மதிகள் செய்திருந்தும் அரசாங்கம் Ordinance மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத் எந்தவொரு மகிழ்ச்சியான நிகழ்ச்சியையும் நடத்தக்கூடாது என்று தடை விதித்தது. குழந்தைகளுக்கு மிட்டாய், சாக்கலேட் வழங்கப்படக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போதும் பஞ்சாபில் அந்தக் காலத்தில் இருந்த அதே அரசாங்கம் இருப்பதால் நமக்கு இது தொடர்பாக கவலை இருந்து வந்தது. ஆனால், அல்லாஹ் அருள் செய்தான். மே 27 ஆம் தேதி எப்படி கிலாஃபத் தினம் கொண்டாடப்பட வேண்டுமோ அவ்வாறே கொண்டாடப்பட்டது. மற்ற நிகழ்ச்கிளும் நடந்தன. உணவு, மிட்டாய் ஆகியவை வழங்கப்பட்டன. அமைதியாக இந்த எல்லா பணிகளும் நடந்ததால் பலருக்கும் இந்த நிகழ்ச்சியைப் பற்றியே தெரியாது. ஆனால், மவ்லவிமார்கள் அரசாங்கம் இந்த நிகழ்ச்சிகளை தடை செய்திருக்கும். பத்திரிகைகளிலும் இது பற்றிய அறிவிப்பு வந்திருக்கும் என கருதினார்கள். ஆனால், அந்த அளவு இவ்வி-யத்தில் அரசாங்கம் கடுமை காட்டவில்லை. ஆனால், மவ்லவிமார்கள் காதியானிகளுக்கு இந்த நிகழ்ச்சிகளை நடத்த அனுமதி வழங்கப்படவில்லை. மகிழ்ச்சி கொண்டாடப்படவில்லை. குழந்தைகளுக்கு மிட்டாய் வழங்க அனுமதி கிடைக்கவில்லையென்று அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு அரசாங்கம் மிக முக்கியமான ஒரு பணியை நிறைவேற்றியுள்ளது. மேலும் முஸ்லிம் உம்மத்தை அழிவிலிருந்தும் காப்பாற்றி விட்டது என அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர். குழந்தைகளுக்கு மிட்டாய் கொடுப்பதன் மூலமாக மட்டும்தான் முஸ்லிம் உம்மத்திற்கு அழிவு ஏற்பட்டு விடுமாம். இதுதான் இவர்களது அறிவின் நிலையாகும். இதன் காரணமாக இவர்களே அழிவின் குழியின் பக்கம் செல்வதை இவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை.

எனவே, பாகிஸ்தானிலுள்ள பொதுமக்களை அல்லாஹ் நேர்வழியில் செலுத்த துஆ செய்யுங்கள். முல்லாக்களுக்கு அறிவு கிடைக்காது. அங்குள்ள அரசியல்வாதிகள் தங்களது சுயநோக்கங்களை நிறைவு செய்பவர்களாக மட்டும் இருந்துவிடக் கூடாது. மாறாக அரசாங்கத்தின் உரிமையையும் ஏழைகளின் உரிமையையும் செலுத்துபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். இப்போதுள்ள பாகிஸ்தானில் நிலைமை நாவால் சொல்ல முடியாத அளவில் இருக்கின்றது. கஜானா காலியாகி விட்டது. ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும்போதும் அங்கு லஞ்சம் வாங்கப்படுவதை பார்க்கின்றோம். உணவு தட்டுப்பாட்டின் காரணமாக பொதுமக்கள் பசியால் மரணிக்கின்றார்கள். அதுபற்றி எவருக்கும் கவலை இல்லை. தங்களது நாற்காலிகளை பாதுகாக்கும் கவலையே இவர்களுக்கு இருக்கின்றது. அல்லாஹ் பொதுமக்கள் மீதும் கருணை காட்டுவானாக.

எனவே, எங்கு அஹ்மதிகள் இறைவனுக்கு நன்றியை தெரிவிக்கும் முகமாக கிலாஃபத் ஜுப்ளியை மகிழ்ச்சியாக கொண்டாடுகின்றோமோ அல்லது மற்ற நிகழ்ச்சிகளை கொண்டாடுகின்றோமோ அங்கு அஹ்மதிகள் பாகிஸ்தானையும் துஆவில் நினைவில் வையுங்கள். அல்லாஹ் அந்த ஏழைகளை பாதுகாப்பானாக. அரசை ஆள்பவர்கள் கொடுமை இழைப்பவர்களாக இருந்தால் அவர்களிடமிருந்து அல்லாஹ் அவர்களுக்கு இரட்சிப்பை வழங்குவானாக. அவர்களை சரியான வழியில் நடத்துவானாக.

முஸ்லிம் நாடுகளுக்காகவும் குறிப்பாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு முஹம்மதிய மஸீஹை அடையாளங்கண்டு கொள்ள தவ்ஃபீக் வழங்குவானாக.

உலகத்திற்காகவும் பொதுவாக துஆ செய்யுங்கள். எந்த அழிவின் பக்கம் அது சென்று கொண்டிருக்கின்றதோ அப்படிப்பட்ட தண்டனையிலிருந்தும் அல்லாஹ் அதனை பாதுகாப்பானாக. உண்மையை அடையாளங் கண்டு கொள்ளும் வாய்ப்பை அல்லாஹ் அதற்கு வழங்குவானாக. அதன் மூலம் உலகம் முழுவதும் அல்லாஹ்வின் ஆட்சி நிலவட்டும். ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் கொடி உலகம் முழுவதும் பறக்கும்படி அல்லாஹ் செய்வானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 30.05.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**